# சாமுண்டி மாதா மலைக் கோவில்

## -சாந்திப்பிரியா-




மத்தியப் பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்கள் அவற்றின் கட்டுமானம் மற்றும் வரலாற்றின் பின்னணியினால் பெரும் புகழ்பெற்று விளங்குகின்றன. அதில் ஒன்றுதான் தேவாஸ் எனும் சிற்றூரில் உள்ள மலை மீது காணப்படும் சாமுண்டா மற்றும் துல்ஜா பவானி ஆலயங்கள். தேவாஸ் என்பது இந்தூர், உஜ்ஜயினி மற்றும் போபால் போன்ற மூன்று முக்கிய நகரங்களுக்கு மத்தியில்

உள்ள சிற்றூர் ஆகும். இந்தியாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள மத்தியப் பிரதேசத்தில் தேவாஸ், இந்தூர், உஜ்ஜயினி, நாக்தா மற்றும் போபால் போன்றவற்றை உள்ளடக்கிய பிராந்தியத்தை அந்த காலத்தில் மால்வா மண்டலம் அல்லது மால்வா பிராந்தியம் என்ற பெயரில் அழைத்திருந்தார்கள். அந்த மால்வா பிராந்தியத்தில் மத்தியப் பிரதேச தலைநகரான போபாலில் இருந்து சுமார் 143 கிலோ தொலைவில் உள்ளதே தேவாஸ் எனும் சிற்றூர் ஆகும். அந்த ஊரில் உள்ள மலை மீது தேவி வாசம் செய்கின்றாள் எனப் பொருள்படும் வகையில் இந்தி மொழியில் தேவி வாசஸ்தலம் என அழைக்கப்பட்ட இடம் காலப்போக்கில் மருவி தேவாஸ் என ஆயிற்று.

கடல் மட்டத்தில் இருந்து சுமார் 350 அடி உயரத்தில், சிறு மலை குன்றின் மீது அமைந்துள்ள இந்த இரு ஆலயங்களுக்கும் வருடம் முழுவதுமே ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடுவது சிறப்பான ஒன்றாகும். அதுவும் நவராத்திரி பண்டிகை சமயத்தில் அக்கம்பக்கத்து ஊர்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் காலில் செருப்புக் கூட அணியாமல் கடும் வெயிலிலும் நடந்தே வந்து மகிஷாசுரமர்தினியின் அம்சமாக கருதப்படும் இளையவளான சாமுண்டா தேவியை வழிபட்டுச் செல்வதும் (அவளை வழிபட்டப் பின் மூத்தவளான துல்ஜா பவானியையும் வணங்கி விட்டே செல்வார்கள். அப்படி செய்வதே ஐதீகம் ஆகும்), அப்படி நடந்தே வரும் பக்தர்களில் ஆறு அல்லது ஐந்து வயது குழந்தைகள் உட்பட அறுபது முதல் எழுபது வயது கிழவர்கள் வரைக் கூட உள்ளதைக் காண்பது அதிசயமான காட்சியாகும்.

மலை மீது உள்ள இரு ஆலயங்களில் ஒன்று சாமுண்டா தேவி, இரண்டாவது துல்ஜா பவானி தேவி ஆகும் . சாமுண்டா தேவியை தேவாஸ் நகரை சேர்ந்த முன்னாள் மராட்டிய மன்னர்கள் குலதெய்வமாக ஏற்று இருக்கையில், துல்ஜா பவானியை முன் ஒரு காலத்தில் மராட்டிய மானிலத்தை ஆண்டு வந்த பேரரசன் மற்றும் மராட்டிய மன்னனான சத்ரபதி சிவாஜி தனது இஷ்ட

தெய்வமாக வணங்கி வந்திருந்தார். சாமுண்டா மற்றும் துல்ஜா பவானி தேவிகளின் சிலைகள் இரண்டுமே மலையோடு சேர்ந்துள்ள பெரிய பாறைக் கல்லில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்த ஆலயம் பர்மார் எனும் மன்னர்கள் காலத்தை சேர்ந்தவை என்றும், அவை பல்வேறு உள்நாட்டுப் போரில் சேதமடைந்து இருந்தாலும் பின்னர் தேவாஸை ஆண்டு வந்த மராட்டிய மன்னர்கள் காலத்தில் புதிக்கப்பட்டு இருக்கலாம் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறினாலும், புதைபொருள் ஆராய்ச்சி வல்லுனர்கள் இந்த சிலைகள் 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவையாக இருக்கலாம் என்றும், அவை 12 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை என்று ஆலயத்தில் உள்ள பண்டிதர்களும் வெவ்வேறு விதமான கருத்தைக் கூறுகிறார்கள். ஆனால் இவை எதற்குமே எந்த விதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. அனைத்துமே வாய்வழிச் செய்திகளாகவே உள்ளன என்றாலும் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது மராட்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இந்த இரு ஆலயங்களிலும் பெருமளவு ஆராதனைகள் இருந்துள்ளன என்பதே அது. இந்த ஆலயத்தில் பாறைகளில் செதுக்கப்பட்டு உள்ள தேவிகளின் சிலைகள் தானாகவே வெளி வந்தவை என்று கூறப்பட்டாலும், இவற்றை எதோ ஒரு சிற்பி தனது கனவில் தோன்றிய உருவத்தைக் கொண்டோ, அல்லது தனக்கு காட்சி தந்த தெய்வத்தின் உருவிலோ தென் இந்தியப் பகுதிகளில் காணப்படும் கிராம தேவதைகளின் உருவ அமைப்பில் செதுக்கி உள்ளார். இங்குள்ள சாமுண்டா தேவி ஆலயம் சக்தி பீடங்களில் ஒன்று என்றும் சாமுண்டா தேவி மகிஷாசுரமர்த்தினியின் அம்சம் என்றும் கூறுகிறார்கள். மகிஷாசுரமர்த்தினியானவள் பராசக்தியான பார்வதியின் அம்சமே ஆவாள்.

பல்வேறு இடங்களிலும் சக்தி பீடம் எழுந்த வரலாற்றைப் பற்றி கூறும் கதை புராணத்தில் உள்ளது. அது என்ன என்றால் முன்னொரு காலத்தில் சிவபெருமானின் மாமனாரும், பார்வதியின் தந்தையுமான தக்ஷன் என்பவர் சிவபெருமானை அவமதிக்க எண்ணி ஒரு பெரிய யாகத்தை நடத்தினார். அந்த யாகத்தில் பங்கேற்க அவர் சிவபெருமான் மற்றும் அவர் மனைவி

பார்வதியைத் தவிர தேவலோகத்தில் இருந்த அனைத்து கடவுட்கள், தேவர்கள் மற்றும் ரிஷி முனிவர்களையும் அழைத்து இருந்தார். தன்னை தந்தை அழைக்காவிடிலும் அதில் கலந்து கொண்டே ஆகவேண்டும் என்று மனநிலையில் இருந்த பார்வதி அதை தவிர்க்குமாறு சிவபெருமான் அவளிடம் எத்தனை முறை எடுத்துக் கூறியும் கேட்காமல் சிவபெருமானை கட்டாயப்படுத்தி யாகத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்கு சென்றவர்களை வரவேற்காமல் இருந்தது மட்டும் இல்லாமல் சிவபெருமானை பல்வேறு வார்த்தைகளினால் தக்ஷின் கேலியாக பேசி அவமானப்படுத்த அதை பொறுக்க முடியாமல் போன பார்வதி யாகத் தீயில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். இறந்து போனவள் உடலை தன் தோளின் மீது வைத்துக் கொண்டு உலகெங்கும் அதி பயங்கரமான கோபத்துடன் செல்லத் துவங்கிய சிவபெருமானை சாந்தப்படுத்த விஷ்ணுவானவர் தனது சக்ராயுதத்தை வீசி இறந்தவள் உடலை ஐம்பத்தி ஒரு துண்டுகளாக வெட்டி எறிய அவள் உடல் பாகங்கள் விழுந்த இடங்கள் அனைத்துமே சக்தி பீடங்கள் ஆயின. அப்படி அவள் உடலின் ஒரு பாகம் விழுந்த இடமே சாமுண்டா தேவி ஆலயம் உள்ள இடம் ஆகும் என்று இந்த ஆலயத்தில் சாமுண்டா எழுந்த வரலாற்றைக் குறித்துக் கூறுகிறார்கள்.

இந்த ஆலயத்தில் காணப்படும் சாமுண்ட மாதா நான்கு கைகளைக் கொண்டு காட்சி தருகிறாள். அதில் மூன்று கைகளில் ஆயுதங்கள் இருக்க நான்காவது கையில் மனித தலை ஒன்றை பிடித்து வைத்துக் கொண்டு இருப்பது போல காணப்படுகிறது. வலது கையின் கீழே ஒரு அன்னப் பறவை உள்ளது. அன்னப் பறவை சாதாரணமாக சரஸ்வதி தேவியின் வாகனம் என்பார்கள் என்பதினால் இந்த தேவியின் அம்சம் குறித்து குழப்பம் உள்ளது. அது மட்டும் அல்ல, இந்த ஆலயத்திலுள்ள தனித் தன்மையுடன் கூடிய சாமுண்ட மாதாவின் உருவம் எந்த ஒரு புராணங்களிலும் அல்லது நூலிலும் காணப்படவில்லை என்பதும் வியப்பான செய்தியாகும் .

சாமுண்டா தேவியின் சரித்திரம் குறித்த பல கதைகள் உள்ளன. ஜலந்தரா எனும் ஒரு அசுரனுடன் சிவபெருமான் யுத்தம் புரிந்தபோது சாமுண்டா தேவியானவள் ருத்திரனுடன் சேர்ந்து சிவபெருமானின் சேனையின் தளபதியாக அந்த போரில் கலந்து கொண்டாள். ஆகவே அந்த போரில் சிவபெருமானுக்கு கிடைத்த வெற்றியைக் குறிக்கும் வகையில் சாமுண்டா தேவிக்கு ஹிமாசலப் பிரதேசத்தில் ஒரு ஆலயம் அமைக்கப்பட்டு அதில் அவள் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறாள். அதில் உள்ள சாமுண்டாவை ருத்திர சாமுண்டா என்ற பெயரில் ஆராதித்து அழைக்கின்றார்கள். இன்னொரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடைபெற்ற யுத்தத்தில் பல அறிய வரங்களைப் பெற்று அழிக்க முடியாமல் இருந்த சாண்டா மற்றும் முண்டா எனும் அசுரர்களை அழிப்பதற்காக பார்வதியின் இன்னொரு அம்சமான கௌஷிகா எனும் தேவியின் நெற்றியின் புருவத்தில் இருந்து சாமுண்டா தேவி வெளி வந்து யுத்தத்தில் கலந்து கொண்டாள். அவளை சண்டிகா தேவி என்று பெயரிட்டு அழைத்தார்கள். யுத்தம் முடிந்ததும் அதில் அவள் பெற்ற வெற்றியினால் மனம் மகிழ்ந்துபோன கௌஷிகா தேவி சாமுண்டா தேவிக்கு சாண்டி தேவி என பெயர் சூட்டினாள்.

தேவி மஹாத்மியத்தின் இன்னொரு புராணக் கதையின்படி தேவலோகத்தில் இருந்த தேவர்களை ஹிம்சை செய்து வந்த ஷும்பா மற்றும் நிகும்பா எனும் இரண்டு அசுரர்களை அழிக்க பார்வதி தேவி காளியின் அவதாரம் எடுத்து அவர்களை வதைத்தாள். ஷும்பா மற்றும் நிகும்பா எனும் அசுரர்களின் சேனைத் தலைவர்களாக சண்டா மற்றும் முண்டா என்பவர்கள் இருந்தார்கள். அவர்களை காளிதேவியே அழித்தாள். இதனால்தான் அந்த யுத்தத்தில் வெற்றி பெற்ற காளிக்கு சாமுண்டா என்ற பெயர் கிடைத்தது. ஆகவே சாமுண்டா தேவிதான் காளி என்றும் கூறுவார்கள்.

எது எப்படியோ, இந்த தேவாஸ் ஆலயம் எழுந்த வரலாறும் அங்குள்ளது. முன்னொரு காலத்தில் உஜ்ஜயினியை ஆண்டு வந்த மன்னன்

விக்ரமாதித்தனின் சகோதரரே பத்ரஹரி என்பவர் ஆவார். அவர் தவ முனிவர், வடநாட்டில் உள்ள நாத் எனும் பிரிவை சேர்ந்தவர். அவர் தனிமையில் இருந்தவாறு தாம் தவம் இருக்க எண்ணி, இங்குள்ள மலைக்கு வந்து தவத்தில் அமர்ந்தார். அவருக்கு பல பக்தர்கள் உண்டு. ஆகவே அவர்கள்  மலை மீது தவத்தில் இருந்த  பத்ரஹரியை வந்து சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டு செல்வார்கள். அந்த மலை மீது நடகாசுரா என்றொரு அசுரனும் வாழ்ந்து வந்தான். அவன் பொறாமை கொண்டு பத்ரஹரியை வந்து சந்திக்கும் மக்களை ஹிம்சித்து பயமுறுத்தத் துவங்கினான். அது சக்தி பீடம் என்பதினால் தன்னை சந்திக்க வருபவர்கள் பயமின்றி மலைக்கு வந்து செல்ல வழிவகுத்து, அந்த அசுரனின் கொட்டத்தை அடக்குமாறு பார்வதியை பத்ரஹரி வேண்டிக் கொள்ள  அவர் முன் காட்சி தந்த பார்வதி தேவியும் அவர் வேண்டுகோளுக்கு இணங்கி சாமுடா தேவியாக உரு எடுத்து அந்த மலையில் இருந்த அசுரனை துரத்தித் துரத்தி அடித்து முடிவாக அவனை வதம் செய்தாள். இதனால்தானோ என்னவோ, நாத் பிரிவை சேர்ந்த பத்ரஹரியின் பெருமையினால் இந்த ஆலயத்தில் நாத் பிரிவை சேர்ந்தவர்களே   பூசாரிகளாக உள்ளார்கள். மேலும் நாத் பிரிவை சேர்ந்த மகாயோகி கோரக்னாத்தும்  இந்த பகுதியை சேர்ந்தவரே. சுமார் 250 முதல் 300 ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த செய்திகளின்படி இந்த மலையில் நாத் பிரிவை சேர்ந்த  பல யோக, சித்த முனிவர்கள் தவத்தில் இருந்திருக்கின்றார்கள்.

துல்ஜா  பவானி பற்றி சிறு செய்தியே உள்ளது. சமஸ்கிருதத்தில் அவளை கருணை மிக்கவள் எனும் வகையில் கருணேஸ்வரரூபி என்கிறார்கள். அவள் கருணை மிக்கவள், மன வலிமையை தருபவள் என்கின்றார்கள். அதனால்தான் 20 ஆம் நூற்றாண்டில் அவளை மன்னன் சத்ரபதி சிவாஜி வணங்கி வந்துள்ளார். 1864 ஆம் ஆண்டு சிவாஜி மன்னர் வழிவந்தவரும், மால்வாவின் தார் எனும் பகுதியை ஆண்டு வந்தவருமான நாராயண பவார் என்பவர் துல்ஜா பவானியின்  பெருமையை எடுத்துரைக்கும் வகையில் பெரிய பாடலை இயற்றி உள்ளார். துல்ஜா பவானியை அவர் மஹா காளி, மஹா சரஸ்வதி

மற்றும் திரிலோக சுந்தரி என்றும் புகழ்ந்து பாடினார். ஆகவே அவரே துல்ஜா பவானியின் ஆலயத்தை இந்த மலை மீது எழுப்பி உள்ளதாக கூறுகிறார்கள்.

இன்னொரு கதையின்படி சகோதரிகளான சாமுண்டா மற்றும் துல்ஜா பவானி இருவரும் இந்த மலையின் தெற்கு பக்கத்தில் இருந்த ஒரே குகையில் வசித்து வந்தார்கள். ஆனால் ஒருமுறை சின்ன மனத் தகராறு காரணமாக இருவரும் பிரிந்தார்கள். அதனால் அந்த மலையில் இருந்தே வெளியேறிவிட முடிவு செய்த இளையவள் சாமுண்டா கோபத்துடன் அங்கிருந்து கிளம்பியபோது அவளை அங்கு வந்த ஹனுமான் தடுத்து நிறுத்தி அவளை அந்த மலை மீதே வாசம் செய்யுமாறு வேண்டிக் கொள்ள அவளும் அந்த குகையின் பின்புறத்தில் செல்லத் துவங்கியபோது அங்கு ஒரு சுரங்கப் பாதை தோன்றியது. அதன் வழியே சென்றவள் பின்புறத்தில் அதாவது மேற்கு பகுதியில் ஒரு குகையை அமைத்துக் கொண்டு தங்கினாள். அவள் சென்றதும் சுரங்கப் பாதையும் மூடிக் கொண்டது. அந்த சுரங்கப் பாதை தோன்றிய இடத்தில் பெரிய சகோதரியின் குகையில் பெரிய பிளவு உள்ளதை இன்றும் காணலாம். இப்படியாக இளையவள் வட பகுதியிலும், மூத்தவள் தெற்கு பகுதியிலும் தனித் தனி குகையில் குடிகொண்டு அங்கு வரும் பக்தர்களுக்கு ஆசி கூறி அருள் புரிந்து வருகிறார்கள்.

இரு சகோதரிகளின் பிரிவு தேவாஸை ஆண்டு வந்த மன்னர்கள் குடும்பத்திலும் எதிரொலித்தது. அந்த அரச குடும்பத்தில் மூத்த சகோதரர் துகோஜி ராவ் பவார் சாமுண்டா தேவியை தமது தெய்வமாக ஏற்றுக் கொண்டு வணங்கி வர இளைய சகோதரர் ஜிவாஜி ராவ் என்பவரோ துல்ஜா பவானியை வணங்கி வரலானார்கள். அந்த இரு மன்னர்களும் தத்தம் தேவியை வணங்க அந்த மலை மீது தனி வழிப் பாதையையும், நீர் நிலையையும் அமைத்துக் கொண்டார்கள். ஆனால் தேவாஸ் நகரை இரண்டாக பிரிக்கும் வகையில் தடுப்பு சுவர் எதையும் அமைக்கவில்லை. ஆகவே அந்த மலைக்கு செல்லும் மக்கள் அனைவருமே, தாம் இரு மன்னர்களையும் மதிப்பதாக கூறும்

வகையில் மலைக்குச் சென்றால் இரண்டு தேவிகளின் சன்னதிகளுக்கும் சென்று வணங்கி 'ஜெய் மாதாகி ஜெய்' என முழக்கம் இடுகிறார்கள்.

அந்த மலைக்கு செல்பவர்கள் தாம் தங்குவதற்கு தனி வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என தேவியை வேண்டிக் கொண்டு மலை மீது சிதறிக் கிடக்கும் சின்ன கற்களைக் கொண்டு சின்ன வீடு போல கட்டிவிட்டுச் செல்கிறார்கள். நவராத்திரி பண்டிகையின்போது வெகு தொலைவில் இருந்தும் லட்ஷக்கணக்கான பக்தர்கள் காலில் செருப்புக் கூட அணியாமல் நடந்தே வந்து ஆராதிக்கிறார்கள். இந்த மலையில் இரண்டு தேவிகளைத் தவிர ஹனுமான், பைரவர், அன்னபூர்ணா மற்றும் காளி தேவிக்கும் சிறிய அளவில் தனித் தனியே குகை ஆலயங்கள் உள்ளன. அதே போல இந்த மலை மீது முஸ்லிம் சமுதாய மக்கள் தவறாது வந்து வழிபட்டு வணங்கும் சின்ன மசூதியும், ஜெயின் மதத்தவர் வணங்கும் ஆலயம் ஒன்றும் உள்ளது.

**Also read it in : .[https://santhipriya.com/2015/09/சாமுண்டா-மற்றும்-துல்ஜா.html](https://santhipriya.com/2015/09/சாமுண்டா-மற்றும்-துல்ஜா.html)**

# Chamunda and sister Tulja Devi on a Hillock

## Santhipriya





Many temples in Madhya Pradesh are famous for their structural beauty and legends connected with them. Few amongst the famous temples are Goddess Chamunda Matha and Goddess Tulja Bhavani Devi cave temples, both on top of a small hill called Tekri (In Hindi Tekri means Hill) in the district of Dewas that lies in

between Indore, Bhopal and Ujjain. Dewas an ancient and beautiful town situated in Malwa region in the West-central part of Indian state of Madhya Pradesh is 143 km south west from state capital Bhopal, and 35 km from Indore the commercial capital of Madhya Pradesh. The name Dewas is derived from the belief that the Devi resides on the hill which is called Devi's vasasthal (Residence in Sanskrit). Over period of time the name Devi Vashasthal condensed to become Devivasini and then to Dewas.

The hillock temples – 'Tekri Devi' is 350 feet above sea level and visited by thousands of devotees throughout the year. Especially during the nine days of Navarathri festival, lakhs of devotees from nearby towns and villages walk bare footed to reach Tekri matha temples to offer worship to the Devi. It would not be exaggerated view if one claim that even children in the age of five to six years walk bare footed unmindful of the heat of sun, along with elders in age group of sixty to seventy years, that reveal the extent of faith the devotees have in their heart for the Devi, specially Goddess Chamunda Matha the younger sister amongst the two and who is considered to be an aspect of Goddess Mahishasura Martini.

Of the two Devi temples on the hill, one is for Goddess Chamunda Mata and the other for Goddess Tulja Bhavani Mata, the eldest amongst them. While Goddess Chamunda Devi is Kuldevi of the erstwhile Maratha rulers of Dewas, Goddess Tulja Bhavani was the tutelary deity of Maratha Warrior Chathrapathi Shivaji Maharaja, the famous Maratha ruler who is revered by the Marathi speaking people throughout state of Maharashtra.

Both the statues of the Devi's have been carved out of huge rocks that form part of the hill. Some historians suggest that the hill shrine may have been constructed

during the Kingdom of Parmar and may have been damaged in feudal wars, and resurrected again during the reign of Maratha Kings of Dewas. The archeologists opine that the temples belonged to 9th or 10th BC while the priests in the temple float a theory that the statues belonged to 12th Century. However no culverts or documents are available to substantiate the truth, but it has been seen that elaborate worship in the temples were in vague during the Maratha rulers of Dewas. Though some believe that the statues have manifested of their own, the actual period in which the statues have been carved out is also not known.

The statues of both the Davis in separate shrines may have been carved out of the rock in the imagination of some sculpture, perhaps as visualized or as appeared in their dreams like emergence of village deities in southern parts of India. Goddess Chamunda Matha is considered to be an aspect of Goddess Mahishasura Martini, who again is an aspect of Goddess Parvathi and the temple is considered to be one of the Sakthi Pitas as per the legend floated by word of mouth story for centuries.

A small story is told in the Puranas regarding the appearance of Sakthi Pitas in several parts of the Universe. Once Daksha performed a Yagna to take revenge on Lord Shiva and invited the Deities, demi and semi divines, saints and sages to attend the function, but deliberately left out his son-in-law Lord Shiva and his own daughter Goddess Parvathi. Though uninvited, when Parvathi expressed her desire to attend the Yagna performed by her father, Lord Shiva tried to dissuade her from attending the same. However due to insistence of Parvathi, Lord Shiva had to eventually relent and go with her to the Yagna site. Adding salt to the injury, they were not welcomed by Daksha and Daksha chose to further insult Lord Shiva in so

many words. Goddess Parvathi was unable to bear insults heaped on her husband, so she immolated herself by falling into the Yagna fire. Angered by the insult, and the subsequent death of his wife Goddess Parvathi who jumped into the sacred fire unable to gulp the insult, Lord Shiva carried Goddess Parvathi's corpse on his shoulders and ran around the world for several days in rage. In order to calm down Lord Shiva, immediately Lord Vishnu threw his Chakrayuda to cut Goddess Parvathi's body into fifty one pieces, which fell at several places in the universe all of which subsequently became Sakthi Pitas. People believe that one amongst the fifty one Sakthi Peeta is Chamunda Matha Temple in Dewas.

Here in the hillock temple Goddess Chamunda Matha is depicted with four hands three of which carry three different weapons that include Trisul and the fourth hand holding a human head. A small Swan is seen seated on her right hand side. The swan found sitting under Devi Goddess Chamunda is baffling because Mahishasura Martini's carrier is lion and that of Goddess Parvathi is divine Nandi. The Swan is generally considered to be carrier vehicle for Goddess Saraswathi. Moreover the image of Chamunda Matha is not found in any of the Hindu Scriptures or Puranas or even in any other temple sculptures. It is unique by itself.

There are several legends connected with Goddess Ma Chamunda Devi. One legend says Goddess Chamunda fought as Chief Chamunda along with Rudra in the battle fought between demon Jalandha and Lord Shiva. In reverence and memory of the victory in the battle a temple dedicated to Chamunda was established in Himachal Pradesh in which Goddess Chamunda Devi is worshiped as Goddess Rudra Chamunda'. As per another legend, in a battle fought between the gods and demons, Goddess Chamunda devi emerged from the eyebrow of

Goddess Kaushika who is an aspect of Goddess Parvathi. The Devi who came out her eyebrow was named Chandi (Some say Chandika Devi) devi and was assigned the task of eliminating demons Chanda and Munda who possessed with several boons from Lord Brahma remain un conquerable by any of the Gods or Goddesses. Therefore Chandi had to emerge in a different form to fight fierce battle with those two demons and at last kill them. Goddess Chandika took the slain heads of the two demons Chanda and Munda to display them to the Goddess Kaushika who created her. Immensely pleased, Goddess Kaushika blessed Chandi and bestowed upon her the title of Chamunda.

Another legend says that in the famous battle as found in Devi Mahatmiyam, Goddess Kali killed the two generals of Shumbha and Nishumba, two most dreadful Demons possessing several boons from Lord Shiva with which they terrorized those in heaven. The names of those two generals killed by her were Chanda and Munda and as a result of the victory Goddess Kali received the title Chamunda.

There is a story on how the Chamunda Devi temple came up on hillock in Dewas. Vikramaditya was a famous King who ruled Ujjain. His brother Bharthahari turned into a saint went to Dewas and sat in a secluded place over the present hill where Chamunda devi is seated and sat on meditation. He belonged to Nath community. Since he was highly learned scholar every one affectionately called him Nathji (Ji is normally affixed for elderly and respected persons) and visited him to pay their respect and obeisance. An Asura named Natagasura was also residing in the same hill, and out of jealousy he started terrorizing those who came to pay obedience to Nathji. Therefore those whoever went to meet Bharthahari were afraid of climbing

the hill to meet Nathji. Bharthahari knew that the hill was Sakthi Peeta. Therefore he prayed to Goddess Parvathi to put an end to the menace of Natagasura so as to ensure that his devotees visited him without fear. Pleased with his prayers Goddess Parvathi appeared before Bharthahari and promised to end the atrocities of the Asura. Thereafter Parvathi took the form of Chamunda Matha, chased Natagasura around the hill and finally killed him. Therefore people believe that Chamunda resided in that hill. Perhaps this could be the reason why the priest of the temple traditionally belonged to the Nath community. According to the Nath history, we find Bharthahari, brother of King Vikramaditya belong to Nath community. Yogi Gorakhnath, one other saint also belonged to this region. Over 250-300 years, it was seen that this region remained the place for meditation of Yogis belonging to Nath community.

In respect of Goddess Thulja Bhavani, some information is available. Goddess Bhavani means one who gives mental strength and is kind hearted (In Sanskrit it is Karuna). Therefore in the twelfth century she was adored as Karuneswararoopi and worshiped by Chathrapathi Shivaji. In the year 1864 Narayana Pawar, one of the decedents of Chathrapathi Shivaji, who was the ruler of Dhar, also part of Malwa region which included Dewas in the then Central India reportedly compiled a verse in praise of Goddess Tulja Bhavani equating her with Goddess Maha Kali, Goddess Maha Lakshmi, Goddess Maha Saraswathi and Goddess Triloka Sundari. Therefore it is believed that the Dhar ruler might have constructed the temple for Goddess Tulja Bhavani in the hill.

As per another story, the twin sisters Goddess Chamunda Devi and Goddess Tulja Bhavani initially lived together in the Southern part of the hill in a cave. On

account of a trivial issue 'Who out of the two be worshiped first by the visiting devotees', the sisters decided to part company and to live separately in different places. As Goddess Chamunda Devi, the younger one amongst them began walking out from Goddess Tulja Bhavani's cave which was in the southern side of the hill, Lord Hanuman came there and prevented her from leaving the hill and pleaded with her to continue to stay in the same hill to bless her devotees who climbed the hill to visit them. Therefore Chamunda Devi made a tunnel from the cave of Tulja Bhavani and crossed over to the Northern side to settle in a cave there. The tunnel got closed by itself. The elder sister Tulja Bhavani however continued to remain in the same cave on the southern side. One can see the big crack which was indeed the tunnel created by Goddess Chamunda behind Goddess Tulja Bhavani's cave.

The division in the sisters echoed in the family of Dewas Rulers too. The eldest of the two brothers, Thukoji Pawar and his subjects started worshiping Goddess Chamunda Matha while the Younger brother Jevaji Rao and his subjects continued to worship Goddess Tulja Bhavani. Though both the rulers established two separate paths to go to the hill top by laying separate roads and drinking water facilities inside Dewas, they did not demarcate the town with separating wall to show the division, people who went to the hill top worshiped both the Devi and jointly chanted 'Jai Matha Ki Jai' to show their solidarity to the sister Devi.

Picking up the scattered small stones from the hill top, people assemble them to appear like a small house in blind belief that they would sooner or later build a house of their own. During nine days of Navarathri festival people from faraway places throng the temple by trekking barefooted till they reach the temple. Apart

from the two Devi shrines, separate shrines in much smaller size (Caves) are also found for Lord Hanuman, Lord Bhairava, Goddess Annapurna, and Goddess Kali Devi. On top of the hill is a Durgah of a Muslim Peer which is visited by the Muslim community regularly. The Jain community has also constructed a beautiful monument made of marble in the same hill.

**This can also be read in the following link: https://santhipriya.com/2015/09/chamunda-and-tulja-devi-english.html**